بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *10/07/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டரான ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் கொடை மற்றும் வள்ளல் தன்மை குறித்த ஈமானுக்கு ஒளியூட்டும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ
نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

**ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் இர்ஃபானி அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்**: ஹுஸூர் (அலை) அவர்களின் வாழ்வில் வாரி வழங்கும் வள்ளல்தன்மையின் மற்றோர் உன்னதமான பண்பும் வெளிப்பட்டது; அது பரிந்துரை மற்றும் சிபாரிசு எனும் வடிவில் இருந்தது. சில நேரங்களில், அன்னாரின் சமூகத்திற்கு ஏதேனும் கேட்டு ஒருவர் வருவார்; அவரது தேவையை நிறைவு செய்வது அன்னாரின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்காது. மாறாக, அது மற்றவர்களோடு தொடர்புடையதாக இருக்கும். இத்தகைய சூழலில், தமது சொந்தத் தேவைகளுக்காகக் கூட யாரிடமும் எதையும் கேட்டிராத ஹுஸூர் (அலை) அவர்கள் (கேட்டு வந்த) அந்த நபருக்காக பிறரிடம் பரிந்துரை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். மிர்ஸா இமாமுத்தீன் சாஹிப் இந்த இயக்கத்தின் கடும் எதிரியாக இருந்தார் என்பதும், ஹுஸூர் (அலை) அவர்களின் குடும்பத்துடன் அவருக்குப் பகை இருந்தது என்பதும் மறைவான ஒன்றல்ல; ஆயினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் உலக விஷயங்களில் அவரது பகையை எப்போதும் பொருட்படுத்தியதில்லை. அதாவது, அவரிடம் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வதில் அன்னார் ஒருபோதும் எந்தவொரு வேறுபாட்டையும் காட்டியதில்லை. அவர் பலமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் நிதி உதவி பெற்றுள்ளார். இத்தகைய பேருதவிகளைப் பெற்ற போதிலும் அன்னாரை எதிர்ப்பதிலும் அவர் ஈடுபட்டிருந்தார். ஒருமுறை அவர் ஒரு குதிரையை விற்பனை செய்ய வேண்டியிருந்தது. அதற்காக, அந்தக் குதிரையை ஜம்முவிற்கு கொண்டு சென்று ஹஸ்ரத் ஹகீமுல் உம்மத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மூலமாக சமர்ப்பித்தால் அதற்கு ஒரு நல்ல தொகை கிடைக்கும் என்று அவர் ஒரு சிறந்த வாய்ப்பைத் திட்டமிட்டார். இந்தத் திட்டத்தை மனதில் கொண்டு, அவர் நேரடியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் வந்து, ஹஸ்ரத் ஹகீமுல் உம்மத் அவர்களின் பெயருக்கு ஒரு பரிந்துரைக் கடிதம் எழுதித் தருமாறு வேண்டினார். அன்னார் இந்த வேண்டுகோளை நிராகரிக்கவில்லை; எவ்விதத் தாமதமுமின்றி ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்களின் பெயருக்கு ஒரு பரிந்துரைக் கடிதத்தை வழங்கினார்கள்.

ஹோஷியார்பூரைச் சேர்ந்த மிர்ஸா அஹ்மத் பேக் -ன் மகனான மிர்ஸா முஹம்மது பேக் -ன் குடும்பம் முற்றிலும் மார்க்கப்பற்றில்லாததாகவும் இந்த இயக்கத்தின் கடும் எதிரியாகவும் இருந்த காரணத்தால், அவர்களது குடும்பத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உறவு சுமுகமாக இருக்கவில்லை. மிர்ஸா முஹம்மது பேக் ஜம்முவிற்குச் சென்று வேலை செய்ய விரும்பினார். அதற்காக ஹுஸூர் (அலை) அவர்களிடம், ஹஸ்ரத் ஹகீமுல் உம்மத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் பெயருக்கு ஒரு பரிந்துரைக் கடிதம் எழுதித் தருமாறு வேண்டினார்; இதன் மூலம் (முதலாவது கலீஃபத்துல் மஸீஹ்) அவர்கள் உதவி செய்யக்கூடும் என்று கருதினார். அன்னார் எவ்விதத் தாமதமுமின்றி ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்தார்கள். அக்கடிதத்தில், இவரது தந்தை என்னிடம் விரோதம் கொண்டிருந்த போதிலும், இத்தகைய மக்களின் கடுமையான போக்குக்கு எதிராக நாம் மென்மையைக் கடைப்பிடித்து, اِدْفَعْ بِالَّتِيْ هِيَ اَحْسَنُ உடைய நற்கூலியைப் பெறுவதில் எந்தத் தடையுமில்லை. எனவே, அவருக்கு உதவி செய்து காவல் துறையில் வேலைக்குச் சேர்த்து விடவும் என எழுதியிருந்தார்கள்.

**ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் இர்ஃபானி அவர்கள் எழுதுகிறார்கள்**: காதியானில் நிஹால் சந்த் என்ற ஒரு பிராமணர் இருந்தார்; அவர் தனது இளமைக் காலத்தில் ஒரு பிரபலமான வழக்குவாதியாக இருந்தார். மேலும், ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களின் குடும்பத்தினருடன் பொதுவாகப் போட்டியிடுவதிலும், விஷமத்தனம் செய்வதிலும் ஈடுபட்டிருந்தார். அவரது இறுதிக் காலத்தில் அவரது நிதி நிலைமை மிகவும் மோசமடைந்தது; எந்தளவுக்கு என்றால், சில நேரங்களில் அவருக்குத் தனது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்குக் கூடச் சிரமங்கள் ஏற்பட்டன. அவர் ஒருமுறை ஹாஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் வாசலுக்கு வந்து, சந்திப்பதற்கான விருப்பம் தெரிவித்துத் தனது கதையைக் கூறினார். அன்னார் அவருக்கு ஆறுதல் அளித்ததோடு இருபத்தைந்து ரூபாய் தொகையை வழங்கி, உமக்குத் தேவைப்படும்போது எனக்குத் தெரிவிப்பீராக என்றும் கூறினார்கள். அதற்குப் பிறகு அது அவருக்கு ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது; அவர் ஓரிரு மாதங்களுக்குப் பிறகு வருவார், ஒரு கணிசமான தொகையைப் பெற்றுச் செல்வார். ஒருமுறை அவர் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடமிருந்தும் கூடக் கடனாகப் பெற்றிருந்தார். அன்னார் கடனைத் திரும்பக் கேட்டபோது, மிர்ஸா ஜி அவர்களோ எப்போதும் எனக்குப் பணம் கொடுக்கிறார்கள்; அதன் மூலமே எனது வாழ்வாதாரம் (சீராக) சென்று கொண்டிருக்கிறது. அன்னார் ஒருபோதும் பணத்தைத் திரும்பக் கேட்டதில்லை என்று கூறினார். அதற்குப்பிறகு, ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் அவரிடம் அதனைக் கேட்காமல் விட்டுவிட்டார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்**: YMCA-வின் செயலாளராக இருந்த பாதிரியார் வால்டர் M.A அவர்கள், தனது நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களைப் பற்றிப் பின்வரும் கருத்தைப் பதிவு செய்துள்ளார்; 'மிர்ஸா சாஹிப் அவர்கள் தமது பழக்கவழக்கங்களில் எளிமையானவராகவும், தாராள மனப்பான்மை கொண்டவராகவும் இருந்தார். தமது எதிரிகளின் தரப்பிலிருந்து வந்த கடுமையான எதிர்ப்புகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் எதிராக அவர் காட்டிய ஒழுக்க நெறி சார்ந்த துணிச்சல் நிச்சயமாகப் பாராட்டத்தக்கதாகும். ஈர்க்கக்கூடிய ஒரு காந்த ஆற்றலும் மிகுந்த நற்பண்புகளும் கொண்ட ஒரு மனிதரால் மட்டுமே, கொள்கைக்காக உயிரையே தியாகம் செய்யும் மக்களின் நட்பையும், விசுவாசத்தையும் பெற முடியும்; அவர்களில் குறைந்தபட்சம் இருவர் ஆப்கானிஸ்தானில் தங்களது கொள்கைக்காக

உயிரையே தியாகம் செய்துள்ளனர். ஆயினும், அவர்கள் மிர்ஸா சாஹிபை விட்டு விலகவில்லை. நான் சில பழைய அஹ்மதிகளிடம் அவர்கள் அஹ்மதியாக மாறியதற்கான காரணத்தைக் கேட்டபோது, அவர்களில் பெரும்பாலார் மிக முக்கியக் காரணமாக மிர்ஸா சாஹிபின் தனிப்பட்டத் தாக்கத்தையும், மக்களைத் தம்பால் ஈர்த்துக் கொள்ளும் அன்னாரது ஆளுமையையுமே எடுத்துக் கூறினார்கள்.'

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் யாருக்கு எதைக் கொடுத்தாலும் அது எவ்வித விளம்பரத்திற்காகவும் இருக்காது; மாறாக, முற்றிலும் அல்லாஹ்வின் திருப்திக்காகவும், அல்லாஹ்வின் படைப்புகள் மீதான பரிவு எனும் கண்ணோட்டத்தின் அடிப்படையிலுமே கொடுப்பார்கள். எனவே, பொதுவாகவே அன்னார் மிகவும் மறைமுகமான வழிகளிலேயே இந்த கொடைகளை வழங்கி வந்தார்கள்; சில நேரங்களில் மற்றவர்களுக்குச் செயல்முறைப் பயிற்சியை கற்பிப்பதற்காக வெளிப்படையாகவும் வழங்குவதுண்டு. யாசகரின் கோரிக்கையை ஒருபோதும் நிராகரிப்பதில்லை என்பது அன்னாருடைய பழக்கமாக இருந்தது. மேலும், சில மனிதர்களின் தேவைகளை உணர்ந்து அவர்கள் கேட்பதற்கு முன்னரே அவர்களுக்கு உதவுவதும் அன்னாரது நடைமுறைகளில் ஒன்றாக இருந்தது.

1904 ஆம் ஆண்டில் ஒருமுறை ஹிஜ்ரத் செய்து வந்த ஒரு கலப்பற்ற நபரிடம், இது குளிர்காலம்; உங்களுக்கு ஆடைகள் தேவைப்படும் என்று கூறிச் சில ரூபாயை வழங்கினார்கள். அந்த முஹாஜிர் தரப்பிலிருந்து எவ்விதக் கோரிக்கையும் இல்லாதபோதிலும் அவ்வாறு செய்தார்கள்.

பின்னர், அன்னார் மிகவும் மறைமுகமான முறையில் மக்களுக்கு வழங்கி வந்தார்கள். அதில் நண்பன், எதிரி என்ற எந்தவொரு பாகுபாடும் இருந்ததில்லை. **ஷேக் ஃபதஹ் முஹம்மது சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்**: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் சமூகத்திற்கு வரும்போதெல்லாம், அன்னார் எனது பயணச் செலவை கொடுப்பதற்கு எப்போதும் ஆயத்தமாக இருப்பார்கள். எனக்குத் தேவை இல்லாத போதிலும், ஹஸ்ரத் அவர்களின் கொடைத்தன்மையின் ஆன்மா எந்தளவுக்கு மகத்தானதாக இருந்தது என்றால், கேட்காமலேயே அன்னார் எப்போதும் கொடுத்துவிடுவார்கள். இந்த நடைமுறை என்னுடன் மட்டும் இருந்ததல்ல; மாறாகப் பெரும்பாலானோருக்கு அன்னார் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். சிரியா மற்றும் அரபு நாடுகளிலிருந்து சில மக்கள் வருவதுண்டு; அவர்கள் தொலைதூர தேசங்களிலிருந்து வந்திருக்கிறார்கள் என்பதால், சில நேரங்களில் அவர்களுக்குப் பயணச்செலவிற்காகப் பெருந்தொகையை வழங்கி வந்தார்கள்.

சில நேரங்களில் மக்கள் வாய் திறந்து கேட்க மாட்டார்கள். மாறாக ஒரு சீட்டு எழுதித் தருவார்கள். இன்ன நபர் ஏதேனும் உதவி கேட்டுள்ளார் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால், ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள் உள்ளிருந்து அந்த யாசகருக்காக ஏதேனும் அனுப்பும் போதுதான் அது தெரியவரும். அல்லது சில நேரங்களில் உள்ளே செல்லும் சமயத்தில், நீங்கள் அமர்ந்திருங்கள், நான் வருகிறேன் என்று கூறிச் செல்வார்கள். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் வரும்போதுதான், அன்னார் அந்த யாசகருக்காக அவர் கோரிய பொருளையோ, ரொக்கப் பணத்தையோ அல்லது ஆடையையோ எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பது தெரியவரும்.

அன்னாரது வாதத்திற்கு முன்னதாக, அன்னாருடைய சகோதரருக்குத் திருமணம் நடக்கவிருந்தபோது, அவர்கள் சில ஆடுகளைக் கொண்டு வரச் செய்திருந்தார்கள்; அவற்றை நங்கல் பாக்பானாவைச் (ننگل باغبانہ) சேர்ந்த ஒரு மனிதர் மேய்த்து வந்தார். ஒரு நாள் ஹுஸூர் அவர்கள் உலாவுவதற்காகச் சென்று கொண்டிருந்தபோது வழியில் அந்த

மனிதரைப் பார்த்தார்கள். அவருடன் அவரது மகனும் இருந்தான்; ஆனால் அவன் வெறும் காலோடு இருந்தான். ஹுஸூர் அவர்கள் அவனை நோக்கி, சிறுவனே! நீ வெறும் காலோடு அலைந்து கொண்டிருக்கிறாயே, உனக்கு முட்கள் குத்தவில்லையா என்று கேட்டார்கள். அதற்கு அவன், ஹுஸூர்! என்னிடம் செருப்பு இல்லை என்று கூறினான். ஹுஸூர் அவர்கள் தமது செருப்பைக் கழற்றி அவனுக்கு அணிவித்தார்கள். அவன் மறுத்துத் தயங்கியபோது, அன்னார், இல்லை! இதனை அணிந்து பயன்படுத்து என்று கூறினார்கள். பின்னர், அன்னார் வெறும் காலோடு வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். அந்த நேரத்தில் அன்னாருடைய வயது இருபது அல்லது முப்பது ஆக இருந்தது.

ஹுஸூர் (அலை) அவர்கள் தமது பேருபகாரரும் தலைவருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, கொடை மற்றும் தாராளத்தன்மையின் இலக்கணமாகத் திகழ்ந்த போதிலும், சில நேரங்களில் ஏதேனும் ஒரு நுட்பம் மற்றும் நலனை முன்னிட்டு அன்னார் யாசகருக்குக் கொடுப்பதைத் தவிர்த்துக் கொண்டதையும் நாம் காண்கிறோம். **ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்**: 1889 இல் அன்னார் லூதியானாவில் தங்கியிருந்தார்கள். அன்னாரிடம் ஒரு யாசகர் வந்து, தனது உறவினர் ஒருவர் இறந்துவிட்டார்; தன்னிடம் கஃபன் மற்றும் அடக்கம் செய்வதற்கான எவ்வித ஏற்பாடும் இல்லை என்று கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மதிப்பிற்குரிய காஸி காஜா அலி சாஹிப் (ரலி) அவர்களிடம், இவருடன் சென்று கஃபனுக்கான ஏற்பாடு செய்து கொடுங்கள் என்று கூறினார்கள். பொதுவாக ஹுஸூர் அவர்களுக்கு இத்தகைய வழக்கம் இருந்ததில்லை. மாறாக, யாசகர் கேட்பதை வழங்கிவிடுவார்கள். காஸி சாஹிப் அவர்கள் அந்த யாசகருடன் புறப்பட்டுச் சென்றார்கள்; சிறிது நேரத்திற்குப் பிறகு சிரித்தவாறே திரும்பி வந்தார்கள். ‘அந்த யாசகர் என்னிடம் கெஞ்சவும் முகஸ்துதி செய்யவும் தொடங்கினார்; நீங்கள் வராதீர்கள், என்ன கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்துவிடுங்கள் என்றார். அதற்கு நான், இல்லை! எனக்கு இவ்வாறுதான் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று கூறியபோது, அவர், யாரும் இறக்கவுமில்லை; கஃபன் மற்றும் அடக்கச் செலவிற்கான தேவையும் இல்லை. இது எனது தொழில் ஆகும்; இப்போது என்னை இழிவுபடுத்தி விடாதீர்கள் என்று கூறிவிட்டு அவர் சென்றுவிட்டார்’ என்று கூறினார்கள்.

அன்னார் குழந்தைகளுக்கும் அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப வாரி வழங்குபவர்களாக இருந்தார்கள். காதியானைச் சேர்ந்த ஹகீம் முஹம்மது உமர் சாஹிபின் மனைவியான அஸீஸா பேகமின் தாயார், பீபி ராணி அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: நான் 1901 ஆம் ஆண்டில் கடிதம் மூலமாக பைஅத் செய்தேன். 1902 ஆம் ஆண்டில் காதியானுக்கு வந்தபோது எனது இளைய மகளும் என்னுடன் வந்திருந்தாள். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் காலையில் நடைப்பயிற்சிக்காகத் தோட்டத்தை நோக்கிச் செல்வார்கள்; நானும் பெரும்பாலான நேரங்களில் அன்னாருடன் செல்வதுண்டு. ஒருமுறை காலை நேரத்தில் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் உணவு உண்ணுகொண்டிருந்தபோது நானும் அங்கே வந்தேன். அப்போது (சிறுமியாக இருந்த) எனது இளைய மகள் அழத் தொடங்கினாள். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள், என்ன கேட்கிறாள் என்று விசாரித்தார்கள்; அதற்கு நான், ரொட்டி கேட்கிறாள் என்று கூறினேன். அன்னார் ரொட்டி கொடுத்தார்கள், இருப்பினும் அவள் அமைதியாகவில்லை. மீண்டும் அன்னார், இப்போது என்ன கேட்கிறாள் என்று விசாரித்தபோது, ஹுஸூர் எதனை உண்கிறார்களோ அந்த ரொட்டிதான் தனக்கு வேண்டும் என்று கேட்கிறாள் என்று கூறினேன். ஹுஸூர் அவர்கள் தாம் உண்ணுகொண்டிருந்த அந்த ரொட்டியையே

அவளுக்குக் கொடுத்தார்கள்; அதன் பின்னர் அவள் அமைதியாக அதனை உண்ணத் தொடங்கினாள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:* கடந்த குத்பாவில் லங்கரின் செலவுகள் அதிகரித்தபோது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் நகைகளை விற்று அந்தச் செலவை ஈடு செய்தார்கள் என்ற சம்பவத்தை நான் கூறியிருந்தேன். இது குறித்து கடந்த வாரம் ஒரு நபர் என்னிடம், தேவை ஏற்படும் பட்சத்தில் மனைவியின் நகைகள் கணவனின் பயன்பாட்டிற்கு வரலாமா? அதனைச் செலவிடலாமா என்று கேள்வி எழுப்பினார். எனவே, இது குறித்து தெளிவுபடுத்த வேண்டியது என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கடனாகப் பெற்று வந்தார்கள்; மேலும், அதனைத் திருப்பிச் செலுத்தியும் வந்தார்கள். இது குறித்து ஓர் அறிவிப்பு உள்ளது. **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அவர்களிடம் பணத்தைக் கடனாகப் பெற்றார்கள். கோதுமை வாங்கி லங்கரின் செலவையும், வீட்டுச் செலவையும் ஈடு செய்தார்கள்; ஏனெனில் பெருமளவு உணவு அன்னாரது வீட்டிலிருந்தே சமைக்கப்பட்டு வந்தது. அதன் பிறகு, அன்னார் சௌத்ரி ருஸ்தம் அலி சாஹிபிடமிருந்து 500 ரூபாயையும், சில நெய் டப்பாக்களையும் வரவழைத்து, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் கடனைத் திருப்பிச் செலுத்தினார்கள்.

**உணவில் பரக்கத் ஏற்பட்டது பற்றிய ஒரு சம்பவம் உள்ளது. ஹஸ்ரத் மியான் அப்துல்லாஹ் சாஹிப் சனோரி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: 'ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில விருந்தினர்களுக்கு விருந்தளித்தார்கள். உணவு உண்ணும் நேரத்தில் அதே அளவிற்கு இன்னும் சில விருந்தினர்கள் வந்து சேர்ந்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், 'மற்ற உணவுகளை ஓரளவிற்குச் சமாளித்து விடலாம்; ஆனால் ஸர்தா (இனிப்புச்) சோறு மிகவும் குறைவாக உள்ளது; எனவே இதை அனுப்பாமல் இருக்கிறேன்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் சாஹிப் அவர்களோ, இல்லை! இது பொருத்தமாக இருக்காது; நீ அந்த ஸர்தா சோறு பாத்திரத்தை என்னிடம் கொண்டு வா என்று கூறினார்கள். அன்னார் அந்தப் பாத்திரத்தின் மீது ஒரு கைக்குட்டையைப் போட்டு அந்தக் கைக்குட்டையின் கீழாகத் தமது கையை நுழைத்து, ஸர்தா சோற்றில் தமது விரல்களை வைத்தார்கள். இப்போது அனைவருக்கும் உணவை எடுத்துப் பரிமாறுங்கள் என்று கூறினார்கள். இந்த ஸர்தா சோறு பரிமாறப்பட்டபோது அனைவரும் இதனை உண்டார்கள்; கொஞ்சம் எஞ்சியும் விட்டது.'

இவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கொடை மற்றும் தாராளத்தன்மையின் சில சம்பவங்களாகும்; இதில் தமது எஜமானரும் வழிகாட்டியுமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அன்னார் எத்தகையதொரு முன்மாதிரியைக் காட்டினார்கள் என்றால், உற்றார், மற்றார் மற்றும் எதிரிகள் கூட இதன் மூலம் பயனடைந்து கொண்டே இருந்தனர்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)